# மாகாணக்கல்வித்திணைக்களம்

## வடமாகாணம்

## க.பொ.த (உ/த) பரீட்சை - 2020

## பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் புள்ளித்திட்டம்

## பரதநாட்டியம் II (53T II) நேரம்-3மணி

பகுதி 1 இல் **முதலாம் வினா** உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி 11 இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி1

1.

1) **பதவர்ணத்தின் இலட்சணத்தை எழுதுக.**
   - ❖ பரதநாட்டியக்கச்சேரிகளில் சிகரமாக விளங்கும் 4 ஆவது உருப்படி
   - ❖ பூர்வாங்கம்,உத்தராங்கம் எனப்பிரிக்கப்பட்டு பூர்வாங்கத்தில் பல்லவி,அனுபல்லவி,முக்தாயிஸ்வரம் என்பனவும் உத்தராங்கத்தில் சரணம்ஈசரணஸ்வரம் என்பனவும் அடங்கும்
   - ❖ நாட்டியத்திற்காக உருவாக்கப்பட்ட பதவர்ணத்தில் நாயக,நாயகி வெளிப்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

   நடனமாடுபவரின் திறமையை அளவிடக்கூடியதாக நிருத்தம், நிருத்தியம் சமஅளவில் காணப்படுகிறது

   (03புள்ளிகள்)


2) **நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர், நடனஅமைப்பாளர், பாடலுக்குரிய கடவுள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.**

| | | |
|---|---|---|
| ❖ இராகம் | - ஆனந்தபைரவி | பூர்விகல்யாணி |
| ❖ தாளம் | - ஆதி(இரட்டைக்களை) | ஆதி(இரட்டைக்களை) |
| ❖ இயற்றியவர் | - தஞ்சை சிவானந்தம் | K.N.தண்டாயுதபாணிப்பிள்ளை |
| ❖ நடனஅமைப்பு | -ஸ்ரீமதி ருக்மணிஅருண்டேல் | ஸ்ரீமதி.கிரிசாந்தி இரவீந்திரா |
| ❖ கடவுள் | - விஷ்ணு | முருகன் |

   (05புள்ளிகள்)

3) **நீர் கற்ற பதவர்ணத்தின் இரண்டாவது தீர்மானத்தின் சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக.**

   ஆனந்தபைரவி - ஆதி



**தீர்மானம் – 2**

த, க, தளாங்கு தகதிகு தகததிங் கிணதொம், தஜ், ஜம், தரிந்தக தா; | தகுந்தரிகுகுந்தரி கிடதக

தகஜெம், | தரிந்தக தெய், ; தகுந்தரி குகுந்தரி ||

கிடதக தஜ், ஜம், தரி தகஜெம், தரி தா, தீ, கிடதக தரிகிட

தொம், தஜ், ஜம் | தரி தகஜெம், தரி

தா, தீ, கிடதக | தரிகிடதொம், தஜ், ஜம், தரி தஜெம், தரி ||

தா, தீ, கிடதக தரிகிட தொம் , ;; தத் ; தணா தத் ; தணா தத் ; த / ணா .......

(06புள்ளிகள்)

**பூர்விகல்யாணி -ஆதி**

தீர்மானம் – 2

தாகு ஜேகு தக ததிமி , திமித தக தரி , த்த தகஜொணு
தகஜொணு தாம் ; / தாகு ஜேகு தக ததிமி திமித தக / தரித்த தகஜொணு தகஜொணு , தாம் ; ||
தாகு ஜேகு தக தகஜொணு தாம் ;
ததிமிதிமித கிட தகஜொணு தாம் ; / தாகு ஜேகு தக தாம் ; ததி மிதி / மித கிட தாம் ; தாகு ஜேக் , தக ||

தாகு ஜே , கிடதக தாகு ஜே, கிடதக தாகு ஜே,
கிடதக தத் , தித் , தகஜொணு / தித் , தகஜொணு தக
ஜொணு த தீங்கிண தொம் / தக ததீங்கிணதொம் தகதிகு ததீங்கி
ணதொம் தித் , தகஜொணு தகஜொணு
ததீங்கிணதொம் தகததீங்கிணதொம்தகதிகு ததி /,ங்கிணதொம்தகஜொணு
ததீங்கிணதொம் தக / ததீங்கிணதொம் தகதிகு ததீங்கிணதொம் /

4) **இதில் வரும் முத்தாயிஸ்வரக் கோர்வையின் சொற்கட்டினையும் அதன் பாடல் வரிகளையும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக.**

ஆனந்தபைரவி – ஆதி

**முக்தாயிஸ்வரம் ஸாகித்தியம்**

ஸா, கரிஸ நி நி. ஸா, மகரிஸ நி. / ஸா, ப ம க ரி நி. / ஸக கம பா ; //
நா கரி மிக வும் ஸரஸவகை யாய் மலரணைமேல் அநுதினமும் //

பத ப ஸ்ாநி ஸ் க்ா ரி ஸ்ரி ஸ்நி நிஸ் / பஸ்ாநி த பா ம / க மா கரி ஸா நி. //
அருமையாக ஸல்லாப மதியொடுநல்ல உல்லாஸ வில்லாஸ க லாவும் நிலா வில் //

ஸ கா ம கம //
கு லா வ எந்தன் // ஸகியே

**முக்தாயிஸ்வரம்**

**கோர்வை I**

தெய், ; தத், தெய், தத் தெய், தாஹா தெய், ; தித் , தெய், தித், தெய், தாஹா / தெய், ; தத், தெய்,; தாஹா ; / தித், தெய், தாஹா தெய், ; ; ;
தெய், ஹத், தெய், ஹி தெய், ஹத் , தெய், ஹி, தெய், ஹத், தெய், ஹி,
தெய், திதிதெய், திதி / தெய், தெய், திதி தெய்,;
தெய், திதி தெய், / திதிதெய், தெய், திதி, தெய், தெய் திதி
தெய், திதிதெய், தெய், திதி தெய், ; ; தத் ; தணா தத் ; தணாதத் ; த / ணா ...............................................

பூர்விகல்யாணி –ஆதி

**முக்தாயிஸ்வரம்**

தத் ,தெய் , தாம்;தித் ,தெய் ,தாம்;த ,க ,தி ,மி,த ,க ,தி , மி ,/ தெய் , தெய் , தெய் , தெய் , / தத் ,தெய் , தாஹா, தித் ,தெய் , தாஹா |
தெய் , ;தெய் , ; தத் , தெய் , தா ஹா
தெய் , ;தெய் , ; தித் , தெய் , தா ஹா /தெய் ,;தெய் ,; தாம்;தித் ,தத், / தெய் , திதி தெய் ,
திதிதெய் ,தெய் , திதி தெய் ,

**முக்தாயி ஸ்வர ஸாகித்தியம்**

ஸ்ாநித நிதபம கநித பமகரிக / பா மக ரிஸநித / ஸ ா ரி க ம பதப
படி சு கம் பெறவேதேடி அவனருளை நாடி கனிந்துருகி பாடி அனுதினமும்
மகம தமத ஸ்நி தக்ரிஸ் தஸ்மத / ஸ்ாநிதப ம நித / நிபாம கரிகம
டி அலைந்து மனம் வா. டி வத தங்குதடி மோடி செய்ய லாகு மோடி போ . டி

(06புள்ளிகள்)

**2.**

1) **மணிப்புரி நடனத்தின் தோற்றம் பற்றி சுருக்கமாகத் தருக.**

- ❖ இந்தியாவின் கிழக்குப்பிராந்தியத்திலே மணிப்பூரின் தலைநகரான இம்பால் இதன் கேந்திரநிலையமாகும்
- ❖ வைஷ்ணவத்தை தழுவியதான இசை,நடன மரபுகள் காணப்பட்டன

(02புள்ளிகள்)

2) **இந்நடனத்தில் பிரபல்யமான கலைஞர்கள் இருவரின் பெயர்களைத்தருக.**

- ❖ நாபகுழார்சிங்க
- ❖ தோம்பாஹயோபம்

(02புள்ளிகள்)



3) **இந்நடனத்திற்குரிய ஆடைஅணிகள் எவை?**

- ❖ லுங்கி போன்ற பல வண்ண ஆடைகள்
- ❖ கூடைபோன்ற பாவாடை கட்டிக் கொண்டு சரிகையிட்ட மெல்லிய துணியால் முக்காடு
- ❖ சிறுமணிகள்,கண்ணாடிச்சில்லுகள் மின்னும் தாள்கள்பதிக்கப்பட்ட உடைகள் வளையல்கள்,சங்கிலி,மோதிரங்கள் கொலுசு

(03புள்ளிகள்)

4) **இந்நடனத்திற்குரிய இசை,பக்கவாத்தியம் என்பவற்றைத் தருக.**

- ❖ வடஇந்திய ஹிந்துஸ்தானி இசை
- ❖ மத்தளம்,கைத்தாளம் மஞ்சிரா என்ற சிறுதாளம்,ஊதுகுழல்,கெஞ்சிரா, கர்தால்

(03புள்ளிகள்)

5) **மணிப்புரி நடனத்தின் ஆடல்முறைகள் பற்றி விளக்குக.**

- ❖ ஆண்கள் தாண்டவமுறையிலும் பெண்கள் லாசியமுறையிலும் நடனமாடுவர்
- ❖ தாண்டவம் - பிரிவு -சலனம், குன்தானம் செயற்பாடு-தாண்டுதல்,குதித்தல் அகோங்பா எனும் விசேடமான குதித்தல்
- ❖ லாசியம் - பிரிவு -சிபிதாங்கா,ஸ்புகிதாங்கா பாதங்களைச் சிறிது தூக்கி தரையோடுஒட்டிச் சறுக்குதல்
- ❖ உடல் செங்குத்தான நிலை ,எப்போதும் சாந்தமான முகபாவம் இடுப்பிற்கு லேும் கீழும் 8 வடிவிலான அசைவு இடுப்பசைவு கொடுக்காமல் ஆடுவது சிறப்பு
- ❖ முதல்நடை,வாரநடை,கூடநடை என 3 நடைகள்
- ❖ புங்சோனம் நடனத்தில் டோல்கி தோளில் மாட்டிக்கொண்டு சுழன்று ஆடுவர்
- ❖ கர்தார்சோளம் நடனத்தில் பெரிய தாளங்களைக் கட்டிக்கொண்டு ஆடுவர் இவை இரண்டும் சங்கீர்த்தன் எனப்படும்.

(04புள்ளிகள்)

6) **மணிப்புரி நடனத்தின் வளர்ச்சி பற்றி விளக்கி எழுதுக.**

- மணிப்பூரில் ஒரு தனிப்பண்பாடுள்ள மெய்திகள் எனப்படும் மக்கள் நடனக்கலையை வளர்த்தனர்.
- 10 ஆம் நுஸற்றாண்டில் வைணவ வழிபாட்டுடன் வங்கக்கீர்த்தனை முறைகள் பரவியது.
- மணிப்பூர் அதிபர் கரீப்நவாஸ் அவர் புதல்வர் ஆகியோர் காலத்தில் சங்கீர்த்தனம்,ரஸம் ஆகிய இசை நடன மரபுகள் உருவாகின.
- 1856-1886 வரையான காலத்தில் கலைகள் வலிவு பெற்று அரசசபையில் பக்திரஸங்களைப் பாடுவதும் சங்கீர்த்தனங்களில் 64 பாகங்களைப் பாடுவதும் முக்கியமானது.
- துக்கமோ,மகிழ்ச்சியோ இசை நடனம் இல்லாத சந்தர்ப்பமே இல்லை எனலாம்.
- வங்கதேசபாலா ,அரிபாலா என்ற வடிவங்கள் வேகமாகப் பரவி புதுவகையான நடபாலா எனும் சங்கீர்தனமுறை உருவாகியது.

இங்கு ராசநடனம்,பிரார்த்தனை,பரிபாடல்,முழவோசை உள்ளடங்கிய சடங்கு நிகழ்ச்சிகள் முக்கியமானவை (06புள்ளிகள்)

1) **அபிநயம் என்றால் என்ன?**

- ❖ அபி என்பது முன் நயம் என்பது அடைவித்தல் எனவே பார்ப்பவர்கள் முன் கொண்டு வருதல் ஆகும்
- ❖ ஓர் எண்ணக்கருவை அங்க அசைவுகளாலும் முகபாவங்களாலும் வெளிப்படுத்தல்
- ❖ கதாபாத்திரத்தின் தன்மையையும் மென்னையான உணர்வுகளையும் அவ்வப்போது பாத்திரங்களின் பல்வேறுபட்ட மனோபாவங்களையும் பார்ப்பவர்கள் கண்டு இரசிக்கும் வண்ணம் அமைக்கப்படுவதே அபிநயம் ஆகும்.
  (02புள்ளிகள்)

2) **அபிநயத்தின் வகைகள் எவை?**

- ❖ ஆங்கிகம் வாச்சிகம் ஆஹார்யம் சாத்வீகம்
  (02புள்ளிகள்)

3) **அவற்றை ஒவ்வொன்றினதும் உட்பிரிவுகளுடன் விளக்குக.**

**ஆங்கிகம்**

- ❖ ஓர் எண்ணக்கருவின் கருத்து வெளிப்பாட்டினை உடல் உறுப்புக்களாலும் முக, அங்க அசைவுகளாலும் வெளிப்படுத்துவது இங்கு குறிப்பிடப்படும் அங்கங்கள் 3 வகை

1.அங்கம் -தலை.கைகள்,மார்பு.பக்கங்கள்,இடை,பாதங்கள் விரல் ஆகிய 7
2.பிரதியாங்கம்-புயங்கள்,முன்கைகள்,முதுகு,வயிறு,தொடைகள்,முழங்கால்கள் ஆகிய 6
3.உபாங்கம்-கண்,விழி,புருவம்,கன்னம்,மூக்கு,தாடை,பல்,நாக்கு,உதடு,முகவாய்

- ❖ ஆங்கிகஅபிநயம் 4 வகைப்படும்

1.சூசிகாபிநயம் - தாவரங்களின் பகுதிகளை கை,கால்களால் அபிநயித்தல்
2.பாவாபிநயம் - தலையாலும் கண்களாலும் பாவத்தைக் காட்டுதல்
3.தொந்திகாபிநயம் - தலை,கண்,பாதம்,கை இவற்றால் யாவருக்கும் தெரியக்காட்டல்
4.இலட்சணிகாபிநயம் - உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் அததுவாகக் காட்டல்.

**வாச்சிகம்**

- ❖ கருத்துக்களை வார்த்தைகளினால் வெளிக்காட்டுவது.
  பேச்சு,உரைநடை,கவிதை,நாடகம்,இலக்கியம்,இதிகாசம் என்பவற்றிலிருந்து
- ❖ 4 வகை

1.சுகீதவாச்சிகம் - பாத்திரம் தானே பாடிக்கொண்டு அபிநயித்தல்
2.உபகீதவாச்சிகம் - பாடகர் பாட பெண்கள் ஆடுதல்
3.சுசப்தவாச்சிகம் - நடனமாது தானே கணிப்பித்துக்கொண்டே நடனமாடுதல்
4.உபசப்தவாச்சிகம் - நட்டுவனார் கணிக்க பாத்திரம் ஆடுதல்

**ஆஹார்ய அபிநயம்**

- ❖ உடை,ஒப்பனை,அலங்காரங்கள்,பிறபொருட்கள் மூலம் கருத்தை வெளிப்படுத்தவது
- ❖ 3 வகை

1.நிஜகார்யாபிநயம் - சாதாரண ஆடை,அணிகலன்களுடன் நடனமாடுதல்
2.அபிசாரிஆஹார்யம் - புராணஇதிகாச நாடகங்களுக்கு ஏற்ற வேடங்கள்
3.விபசாரிஆஹார்யம் - அந்தந்த நாட்டுச்சபையோர் ஏற்றுக்கொள்ளும்படியான ஆடை,அணிகலன்கள் அணிவது.

மேலும் 4 வகை

1. புஸ்டம் - மாதிரி உருவங்களால் அரங்கை அலங்கரிப்பது
   (அரண்மனை,மலைகள்,மரங்கள்)
2. அலங்காரம்- ஆடை,அணிகலன்கள்,மலர்கள்,மாலைகளால் அலங்கரித்தல்
3. அங்கரச்சணம்- ஒப்பனை,முகப்பூச்சு வர்ணம் பூசுதல்
4. சஞ்சீவம் - உயிருள்ள உயிரினங்களைப் பயன்படுத்தி நடித்தல்

**சாத்வீகம்**

- ❖ ஸத்வ என்பது உணர்ச்சி,
- ❖ உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி மேலீட்டினால் ஏற்படும் பாவ வெளிப்பாடுகள்
- ❖ ஸத்வ நிலைகள் 8

ஸ்தம்பித்தல்,மூர்ச்சித்தல்,புல்லரித்தல்,வியர்த்தல்,நிறமாற்றம்,நடுங்குதல்,கண்ணீர்,குரல்மாற்றம்
(4x4=16புள்ளிகள்)

## பகுதி 2

4.

**1) சிவனின் சப்த தாண்டவங்களையும் அவற்றின் தொழில்களையும் குறிப்பிடுக.**

- படைத்தல் - காளிகாதாண்டவம்
- இன்பக்காத்தல் - சந்தியாதாண்டவம்
- துன்பக்காத்தல் - கௌரிதாண்டவம்
- அழித்தல் - சம்ஹாரதாண்டவம்
- மறைத்தல் - திரிபுரதாண்டவம்
- அருளல் - ஊர்த்துவதாண்டவம்

(07புள்ளிகள்)

**2) நடராஜதிருவுருவத்தின் ஒவ்வொரு அங்கங்களும் குறிக்கும் தத்துவத்தின் கருத்துக்களை விளக்குக.**



- ❖ முக்கண் - உணர்ச்சியை ஊட்டவல்ல புறச்சோதிகளாகிய சூரியன்,சந்திரன்,தீ ஆகிய முச்சுடர்களை மூன்று கண்களாகக் கொண்ட விஸ்வரூபன்
- ❖ குமிண்சிரிப்பு – வினைகளைக் களைந்து அருள் கொடுப்பது
- ❖ சிலம்பும்கழலும் -வினைகளை வென்று பிறப்பறுப்பது
- ❖ திருவாசி - ஒலிக்கும் ஒளிக்குமான தொடர்பினைக் குறிக்கிறது
- ❖ தோடும்குழையும் - ஆணொடு பெண்ணாய் அமைந்தது இவ்வுலகு
- ❖ தீஅகல் - உண்மை ஞானத்தை உணரச்செய்து பாசங்களை நீறாக்குதல்
- ❖ பிறை – அளவில்லாத ஞானம்
- ❖ கங்கை – அளவில்லாத அறிவு
- ❖ ஊமத்தமலர் - விருப்புவெறுப்பற்ற தன்மை
- ❖ திருநீறு – தூய்மை
- ❖ திருச்செவி – உலகின் தீய ஒலிகளை தன்னுள் ஏற்று அருளல்
- ❖ நீலகண்டம் - நஞ்சை உண்டும் சாவாமை நித்தியத்தன்மையை உணர்த்தும்
- ❖ துடி – படைத்தல்
- ❖ அபயகரம் - காத்தல்
- ❖ கஜஹஸ்தம் - வரதஹஸ்தம் அருளல்
- ❖ முயலகன் - ஆணவத்தின் அடையாளம்
- ❖ ஊன்றியதிருவடி – மறைத்தல்
- ❖ தூக்கியதிருவடி – முத்தியின்பத்தை அளிப்பது.

(13புள்ளிகளள்)

5.

1) **கலைகளின் பொற்காலமாக விளங்கும் சோழர்காலப்பகுதியைக் குறிப்பிடுக.**

❖ 9-12ஆம் நூற்றாண்டு (கி.பி 850 – 1270) (01புள்ளி)

2) **இக்காலத்தில் ஆடப்பட்ட கூத்துக்கள் பற்றி விளக்குக.**

❖ சாந்திக்கூத்து,விநோதக்கூத்து (02புள்ளிகள்)

3) **இக்காலத்தில் எழுதப்பட்ட புதிய கலையிலக்கண நூல்கள் இரண்டு தருக.**

❖ விளக்கத்தார்கூத்து,பதினாறுபடலம்,சந்தம்.செயன்முறை (02புள்ளிகள்)

4) **சோழர்கால ஆடற்கலைஞர்கள் பற்றி விளக்குக.**

- ஆடல்பெண்டிர்,தளியிலார்,பதியிலார்,கூத்திகள்,தளித்தேவனார்மகளிர்,கூத்தப்பிள்ளைகள்,தளிச்சேரிப்பெண்டுகள்,தேவரடியார்கள் எனப் பல பெயர்கள்
- கோயில்களில் ஆடல்நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்கவும்,அவர்களின் ஆடற்கலைத்திறனை வளர்க்கவும் நட்டுவர்களும் தலைக்கோலிகளும் இருந்தனர்.
- தளிச்சேரிகள் எனப்படும் ஆடல்பெண்களின் வாழிடமாகவும்,ஆடல் பயிலும் களங்களாகவம் இருந்தன
- கூத்தப்பேரரையன், மாராயன், நிருத்தப்பேரரையன், கூத்தரசன், சாக்கைமாராயன், நட்டுவஆசான் என்ற பட்டங்களால் நடனங் கற்றுக்கொடுக்க நியமிக்கப்பட்டனர்.

(05புள்ளிகள்)

5) **சோழர்கால ஆடற்கலை அரங்குகள் பற்றி விளக்குக.**

- ஆடலும் இசையும் இணைந்து நிகழ்ந்த ஆடலரங்குகள் நாட்டிய மண்டபம், நிருத்த மண்டபம், நாடகசாலை, நானாவித நாடகசாலை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.
- ஆடற்கலைஞர்கள் ஆடல்பயில கோயில் மண்டபங்கள் உதவின. இவை திருக்கோலக்க மண்டபம், நிருத்த மண்டபம், திருக்காவனம், திருவரங்கு, சதுர்சாலை, நாடகசாலை, அம்பலம் எனப்பட்டன.
- மண்டபங்களைப்போலவே இறை ஊர்வலங்கள் நிகழ்ந்த வீதிகளிலும் ஆடல் நிகழ்ந்தது.

(05புள்ளிகள்)

6) **சோழர்காலக் கலை வளர்ச்சியை பிரதிபலிக்கும் ஆதாரங்களை விளக்கி எழுதுக.**

- நாட்டியசாஸ்திரத்தில் கூறப்பட்ட 108 கரணங்களும் சோழர்காலத்திலே 3 இடங்களில் சிற்பமாக்கப்பட்டது
- முதலாம் இராசராசனின் தஞ்சைப்பெரிய கோயிலில் உள்ள மிகநீண்ட கல்வெட்டு தளிச்சேரி பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது
- திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டுத் தகவல்
- பல கோயில்களில் நட்டுவனார் அருந்து பணிசெய்தமை பற்றிய கல்வெட்டுக்கள்

(05புள்ளிகள்)

**6. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

1) **அபிசாரிகா**

- அஷ்டவித நாயகிகளில் ஒருவர்
- நாயகனை நோக்கி நகர்பவள் அல்லது நாயகனைத் தானிருக்குமிடத்திற்கு அழைப்பவள்
- தூரதேசத்தலிருக்கும் கணவனிடம் செல்பவள்

- இவளின் செய்கை ஆவல், வருங்காலத்தைப்பற்றிய இனிய எண்ணங்கள் கணவனுடன் கூடிவாழ்தல்போன்ற இன்பக்கனவுகள் கற்பனைகளில் திழைத்தல் சமயத்திற்குத் தகுந்தபடி ஆடைஆபரணங்களைத் தரித்தல் போன்றனவாக அமையும்

**2) மத்தளம்**

- இது இருமுகத் தோற்கருவி.
- தென்னகத்திற்குரிய தேசிய இசைக்கருவி
- மத்து மத்து என்று ஒலிப்பதால் மத்தளம் எனப் பெயர்பெற்றது
- நடுவு உயர்ந்த நீள் உருவு வடிவானது
- உலகின் அனைத்துத் தோல்கருவிகளைக்காட்டிலும் இனிமையானதால் உத்தம கருவி எனப்பட்டது

**3) வசந்தன்கூத்து**

- வேளாண்மைத்தொழிலுடன் சம்பத்தப்பட்ட இக்கூத்து விவசாயம் முடித்து ஓய்ந்திருக்கும் மக்களின் மனமகிழ்ச்சிக்குரிய கூத்தாக அமைகிறது
- கோயிலின்வெளியே உயரமான வட்டவடிவ அமைப்பில் சிறிய மேடை அமைக்கப்பட்டு ஆடப்படுகிறது
- வசந்தன் கூத்து ஆடினால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை உள்ளது
- விதைத்தல், உழுதல், அறுத்தல், உப்பட்டி கட்டல் என்பவற்றையும் வசந்நராசன் கூத்துப்பார்க்க வருவது போலவும் அபிநயத்தல்
- மத்தளமும் சல்லாரியும் வாத்தியங்களாகப் பயன்படுகின்றன
- 32 வகைளான இராகங்கள் உள்ளன

4) **சப்ரகமுவநடனம்**

- சப்ரகமுவ பிரதேசங்களுக்கு அண்டிய பகுதிகளுக்குரிய தனித்துவமான கலைவடிவம்
- சப்ர எனும் குல குழுவினரால் ஆடப்பட்டமையினால் இவ்வாறு அழைகக்ப்படுகிறது
- சிங்களகலாச்சாரத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தும் இந்நடனம் தெய்வங்கள் பேய்பிசாசுகள் கிரகங்கள் போன்ற கண்ணுக்குப் புலப்படாத சக்திகளினூடாக ஆற்றப்பட்டு வந்த சாந்திக் கருமங்களை அடிப்படையாகக் கொண்டது
- அவை 5 வகைப்படும்
    - முல்மாத்ரய – நடனப்பயிற்சிக்காக ஆடப்படும் ஆரம்பப்பகுதிகள்
    - சிந்துமாத்ரய – கிராமியப்பெண்கள் பாடிய பாடல்களைக் கொண்டது.
    - பட்டுதல்மாத்ரய – சாந்திக்கருமங்களில் ஆடப்படுவது
    - யக்பதமாத்ரய - பிசாசுகளுக்கு சாந்திக்கருமம்
    - யாதினிமாத்ரய – தெய்வங்களிடமிருந்து நன்மை பெறும் நோக்குடன் ஆடப்படுவது
- இதில் 24 வண்ணங்கள் உள்ளன. ஓவ்வொன்றிற்கும் தனித்தனியான இராகமும் தாளமும் விருத்தமும் உள்ளன
- இந்நடனத்திற்குப் பயன்படும் பிரதான தாள வாத்தியம் தவுள

(4x5=20புள்ளிகள்)

**7.**

**1) திருமயிலைக் குறவஞ்சி எனும் நாட்டியநாடகத்தை எழுதிய நாட்டியக்கலைஞர் யார்?**
மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர் (2புள்ளிகள்)



**2) அவருடைய வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக எழுதுக.**

- பிறப்பு- யாழ்ப்பாணம்- இணுவில்- 1931, தாய் தந்தை – பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் சுந்தராம்பாள்
- ஆரம்பக்கல்வி- உடுவில் மான்ஸ் பாடசாலை தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி
- உயர்கல்வி -சென்னையில் கலாசேத்திராவில் திருமதி ருக்மணி அருண்டேல் , சாரதா ஆகியோரிடம் பரதநாட்டியம் ஸ்ரீ பாவநாசம் சிவன் எம் டீ சாரதா ஆகியோரிடம் கர்சாடக இசையும் கற்றார்
- தொழில் -மட்டக்களப்பு அரசினர் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடன விரிவுரையாளராகவும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இடைவரவு விரிவுரையாளர், பரீட்சகராகக் கடமைபுரிந்தார்.
- திருமணம் -இவரது முதல் மனைவி திருமதி ருக்குமணிஅம்மா அமரத்துவம் அடைய திருமதி சுசீலாதேவியை மணமுடித்தார்
- இறைபதம் -2003ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார்

(08புள்ளிகள்)

**3) அவர் நாட்டியக்கலைக்கு ஆற்றிய பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

- மயிலாப்பூர் கபாலீஸ்வரர்மீது திருமயிலைக் கீர்தனைகள் எனும் இசைப்பாடல்களையும் திருமயிலைக் குறவஞ்சி எனும் நாட்டிய நாடகத்தையும் இயற்றினார்
- வடஇலங்கை சங்கீத சபை இசை நடன வளர்ச்சியில் பங்களிப்பு
- உயர்தரவகுப்புத் தேர்விற்கான நடன வினாப்பத்திரக் கட்டுப்பாட்டாளராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதற்தர எழுதுநராகவும் நாட்டிய நாடகத் தயாரிப்பாளராகவும் பணியாற்றினார்
- 72 மேளகர்த்தா இராகங்களிலும் பாடல்கள் இயற்றியவர்
- இவரது கலைப்படைப்புகள் சாதனைகளைப் பாராட்டி இயலிசை வாரிதி, கவிமாணி, மகாவித்தவான், கலாபூஷணம், கலாரத்னா, கௌரவ முதுமாணி ஆகிய பட்டங்களும் கௌரவிப்புகளும் வழங்கப்பட்டன

(10புள்ளிகள்)

**8. "இலங்கையில் பரதக்கலை வளர்ச்சியில் பல அரசசார்பான நிறுவனங்கள் பெரும்பங்காற்றிவருகின்றன." இக்கூற்றினை நீர் கற்ற விடயங்களினூடாக விளக்கி எழுதுக.** (20புள்ளிகள்)

**இலங்கையிலுள்ள அரச சார்பான நிறுவனங்கள் அவற்றின் பணிகள்**

- இராமநாதன் நுண்கலைக்கழகம்
- விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி
- வடஇலங்கைச் சங்கீத சபை